### பத்தாங் காலி – கெந்திங் சாலை நிலச்சரிவு:

# அரச விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்

## கெப்போங் எம்பி வலியுறுத்தல்



**கோலாலம்பூர், அக். 24-**

**பத்தாங் காலி - கெந்திங் சாலையில் நிகழ்ந்த நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி வழங்கும் வகையில் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்ய அரச விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என கெப்போங் நாடாளுமன்ற உறுப்பினர் லிம் லிப் எங் நேற்று வலியுறுத்தினார்.**

இச்சம்பவம் குறித்து பொதுப்பணி இலாகாவின் தடயவியல் பிரிவு மேற்கொண்ட விசாரணை மனநிறைவு அளிக்கும் வகையில் இல்லை என அவர் கூறினார்.

இச்சம்பவத்தை மூடிமறைப்பதுபோல் அதன் விசாரணை அறிக்கை அமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், பொதுப்பணி இலாகாவை, பொதுப்பணி இலாகாவே விசாரணை செய்வது விநோதமாக உள்ளது என அவர் சொன்னார்.

கடந்தாண்டு டிசம்பர் 16ஆம் தேதி நிகழ்ந்த இந்த நிலச்சரிவு சம்பவம் மீதான விசாரணை அறிக்கை நம்பகத்தன்மையற்ற நிலையில் உள்ளதாக அவர் கூறினார்.

பொதுப்பணி இலாகாவின் கட்டுப்பாட்டில் உள்ள அச்சாலையில் நிகழ்ந்த இந்த நிலச்சரிவு சம்பவம் குறித்து பொதுப் பணி இலாகாவே விசாரணை செய்துகொண்டது.

பின்னர் இச்சம்பவத்தில் சூது ஏதும் நடக்கவில்லை எனவும் அது கூறியிருந்தது. எனவே தம்மைப் பொறுத்தவரை இந்த விசாரணை அறிக்கை நடுநிலையாக இல்லை என்பதோடு முரண்பாடாக உள்ளதாகவும் தாம் கருதுவதாக லிம் சொன்னார்.

பொதுப்பணி இலாகாவின் தடயவியல் பிரிவு மேற்கொண்ட இந்த விசாரணை எதையோ மூடிமறைப்பதுபோல் உள்ளதாகவும் அவர் சாடினார்.

பத்தாங் காலி - கெந்திங் சாலையைப் பொதுப்பணி இலாகா நிர்மாணிப்பதற்கு முன்பு அப்பகுதியில் மனித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் அருகில் உள்ள பகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

ஆனால் நட்மா எனப்படும் தேசியப் பேரிடர் கழகத்தின் அறிக்கையில் இச்சம்பவம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் கூறினார். பத்தாங் காலி - கெந்திங் சாலையில் நிகழ்ந்த நிலச்சரிவு மீதான முழு அறிக்கை கடந்த அக்டோபர் 18ஆம் தேதி பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது.

31 உயிர்கள் பலியான இச்சம்பவம் நிகழ்ந்த முதல் நாள் அதிகாலையில் 20 நிமிடங்களுக்கு முன்பு 2 நிலச்சரிவுகள் ஏற்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் அருகில் முகாம்களை அமைப்பதற்கான 3 இடங்களும் முறையான லைசென்ஸ் பெற்றிருக்கவில்லை என கடந்தாண்டு வீடமைப்பு, ஊராட்சித்துறை அமைச்சர் ஙா கோர் மிங் அம்பலப்படுத்தி இருந்தார்.

அப்பகுதியில் பயிர் வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்கு மட்டுமே அதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்தது. மாறாக அங்கு முகாம்களை அமைப்பதற்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறியிருந்தார்.

### வழக்கறிஞர் சட்ட உதவிக்கு

# இணையம் மூலம் மனுச் செய்யலாம்



புத்ராஜெயா, அக். 24-

நாட்டு மக்களுக்குச் சட்ட சேவைப் பயன்பாட்டை எளிதாக்கவும் அதிகாரத்துவத்தைக் குறைக்கவும் சட்ட உதவி சேவைகளை நாடும் விண்ணப்பதாரர்களுக்கு உதவும் வகையில் பிரதமர்துறை நேற்று சட்ட விவகாரப் பிரிவு இணையச் சேவையைத் தொடங்கியது.

6ஜி - இ கிளினிக் மூலம் பொதுமக்கள் இணையத்தின் இச்சேவைகளுக்கு விண்ணப்பம் செய்யலாம். பிரதமர்துறை அமைச்சின் சட்ட உள்விவகாரப் பிரிவு இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

பொதுமக்களுக்கான இந்தச் சட்ட வழக்கறிஞர் உதவிச் சேவையைச் சட்டத்துறை இலாகா கண்காணித்துவரும் என பிரதமர்துறை அமைச்சர் (சட்டம்- உருமாற்றம்) டத்தோஸ்ரீ அஸாலினா ஒஸ்மான் சைட் கூறினார்.

பொதுமக்கள் சட்ட உதவிக்கு விண்ணப்பம் செய்யும்போது இணையம் மூலம் அவர்கள் அதற்கான முழு விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் கொண்டவர்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் இலவச சட்ட வழக்கறிஞர் உதவிகளைப் பெறுவதற்குப் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் இந்தச் சட்ட உதவித் திட்டத்தைத் தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வழக்கறிஞர் உதவியை நாடும் பொதுமக்கள் பல்வேறு அதிகார நடவடிக்கைகளை எதிர்நோக்காமல் இருப்பதற்கும் அவர்கள் எளிதான முறையில் இச்சேவையைப் பெறும் வகையிலும் இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சட்ட உதவி இலாகாவால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட கிளினிக்குகள், சட்ட உதவித் திட்டங்களை நடத்துவதற்கு விண்ணப்பம் செய்யும் நிறுவனங்களுக்கும் இது நல்லதொரு வாய்ப்பாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட உதவி இலாகாவின் கீழ் செயல்பட்டு வரும் இச்சேவையின் வழி தனியார் வழக்கறிஞர்கள் வழங்கும் சட்ட உதவிச் சேவைகளுக்குப் பொதுமக்கள் குறைந்த கட்டணத்தில் சட்ட உதவிகளைப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

குற்றவியல், சிவில், ஷரியா உட்பட பல்வேறு சட்ட வழக்குகளுக்கும் பொதுமக்கள் சட்ட உதவி கோரலாம் என்றும் அவர் கூறினார். இன்று தொடங்கிவைக்கப்பட்ட இந்தச் சட்ட உதவிச் சேவைத்திட்டம் நாளை 25ஆம் தேதி முதல் அதிகாரப்பூர்வமாகச் செயல்படும் என்ற அவர், பொதுமக்கள் சட்ட உதவி இலாகாவின் அகப்பக்கத்தின் வழி இன்னும் விரிவான முறையில் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம் என்றார்.

மக்களுக்கு நியாயமான வகையில் நீதி கிடைப்பதை உறுதிசெய்வதற்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் வழக்கறிஞர்கள், பணி ஓய்வுபெற்ற சட்ட வல்லுநர்கள் ஆகியோரும் இந்தச் சட்ட உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றத்திற்கு வெளியே ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு முன்னாள் நீதிபதிகள், சட்ட உதவி இலாகாவின் முன்னாள் பணியாளர்கள் உட்பட மேலும் சிலரை நியமனம் செய்வது மீதான திட்டமும் தங்களுக்கு உள்ளதாகவும் அஸாலினா குறிப்பிட்டார்.

தேசிய வழக்கறிஞர் சட்ட அறக்கட்டளையைத் தோற்றுவிக்க கூடுதல் மானியம் அறிவிக்கப்படும் என கடந்த ஜூலை மாதம் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்திருந்தார்.

நாட்டு மக்களுக்கு நிலையான - நேர்மையான நீதி வழங்கப்படுவதை உறுதிசெய்ய அரசாங்கம் இந்த அறக்கட்டளையைத் தோற்றுவிக்க விருப்பம் கொண்டுள்ளதாகவும் பிரதமர் கூறியிருந்தார்.


